**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாயம், தேவகோட்டை.**
**முன்னிலை: திருமதி.பா.கலை நிலா., எம்.எல்.,**
**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி /**
**சார்பு நீதிபதி, தேவகோட்டை.**
**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ம் நாள் வியாழக்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 3 ம் நாள்**
**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாய மனு எண் 127/2022**
**TNSV 05–000930–2022**
**---------**

1. வள்ளி
2. அமுதா
3. வைரவன் ... மனுதாரர்கள்

/ எதிர் /

1. கௌதம்
2. கார்த்திக் சோலை
3. Manager, SBI General Insurance Company Ltd,
   Trichy, .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 26.03.20265 ம் தேதியன்று இறுதியான விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.ஆ.பவுல்மெல்கியூர் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.N.நாச்சியப்பன் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கலாகும்...

**<u>உ த் த ர வு</u>**

மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகை ரூ.24,25,000/– ஐ மனு தாக்கல் செய்த தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை ஆண்டுக்கு

12% வட்டியுடன் சேர்த்து 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு சேர்ந்தும், தனித்தும் செலுத்தும்படி உத்தரவிடக் கோரியும், செலவு தொகையினை வழங்க உத்தரவிடக்கோரியும் மனுதாரர்களால் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 166 3(1)ன் படி இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் :-**

(i) கடந்த 29.10.2022- தேதி மாலை 5.00 மணியளவில் இறந்துபோன சிதம்பரம் சின்ன கீரமங்கலம் பகுதியில் உள்ள ரவுண்டானா அருகில் தேவகோட்டை செல்லும் சாலையில் உள்ள APJ ஜவுளிக்கடை முன்பு பொருட்கள் வாங்கி கொண்டிருந்தபோது 1-ம் எதிர்மனுதார் 2-ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான TN-39-DY-3785 எண் கொண்ட வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிராதையாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டிவந்து சிதம்பரம் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக சிதம்பரத்திற்கு நெஞ்சுப்பகுதி மற்றும் கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சைக்காக திருவாடானை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அன்றைய தினமே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இறந்து போன சிதம்பரத்தின் உடல் திருவாடானை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவரது உடல் அவரது சொந்த ஊரான பருத்தியூரில் சமுதாய வழக்கப்படி நல்லடக்கம் செய்யப்பட்டது.

(ii) விபத்தானது 1-ம் எதிர்மனுதாரின் அதிவேகத்தாலும், கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் ஏற்பட்டது. அதனால் 1-ம் எதிர்மனுதார் மீது திருவாடானை காவல் நிலைய குற்ற எண் 240/2022-ல் Sec.279, 337, 304(A) IPC-திருவாடானை நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

(iii) இறந்து போன சிதம்பரம் விபத்திற்கு முன் நல்ல ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருந்து வந்தார். விபத்திற்கு முன்பு சிதம்பரம் சொந்தமாக நிலங்கள் வைத்து விவசாயம் செய்து வந்தார். விவசாய கூலி வேலையும் பார்த்து வந்தார். அதன் மூலம் மாதம் ரூ.25,000/- வருமானம் ஈட்டி வந்தார். அவரது வருமானத்தை நம்பித்தான் அவரது குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். சிதம்பரம் இறந்துவிட்டதால் மனுதாரர்கள் வருமானத்திற்கு வழியின்றி கஷ்ட ஜீவனம் செய்து வருகின்றனர். சிதம்பரம் இழப்பு மனுதார்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

(iv) 1ம் எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுனர் என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், 3-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடுதாரர் என்பதாலும் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர். மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீடு தொகையை 1 முதல் 3 எதிர்மனுதார்கள் சேர்த்தோ, தனித்தோ கொடுக்க கடமைப்பட்டுள்ளனர்.

(v) மனுதார்கள் இறந்து போனவரின் எதிர்கால வருமான இழப்பிற்காக ரூ.20,00,000/- மும், தாம்பத்திய வாழ்க்கை இழப்பிற்காக ரூ. 1,00,000/-மும், அன்பு அபிமான இழப்பிற்காக ரூ.1,00,000/-மும் மன அமைதி இழப்பு வாழ்க்கையில் துன்பம் விரக்தி ஆகியவற்றிற்காக ரூ.1,00,000/-மும், அடக்க செலவிற்காக ரூ.25,000/- மும் Loss of Estate க்காக ரூ.1,00,000/- மும், ஆக பல்வேறு தலைப்புகளின் கீழ் மொத்த இழப்பீடாக ரூ.24,25,000/- இழப்பீடு கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

(i) மனுதாரர்களின் மனுவில் 3ம் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளவற்றைத் தவிர, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிற அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை கற்பனையாக உருவாக்கப்பட்டவை என மறுக்கப்படுகின்றன. மனுதாரர்கள் கூறியுள்ள சங்கதிகளை ஆவணங்கள் மூலம் நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்.

(ii) மனுவில் உள்ள குற்றச்சாட்டுகளை விரிவாக எடுத்துரைப்பதற்கு முன்பாகவும், இறந்தவரின் வயது மற்றும் வருமானம், விபத்தின் தன்மை மற்றும் நிகழ்ந்த முறை, மேலும் கோரப்பட்ட இழப்பீட்டு விவரங்கள் ஆகியவை எல்லாம் அநியாயமானவை, கற்பனையானவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்தின் தன்மை மற்றும் நிகழ்ந்த விதம் தொடர்பாக மனுதாரர்கள் அளித்துள்ள விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்த மனு முற்றிலும் பொய்யானதும் ஆகும். விபத்து ஏற்பட்ட சமயத்தில், இறந்தவர் சிதம்பரம் போக்குவரத்து விதிகளை பின்பற்றாமல் திடீரென சாலையை கடக்க முற்பட்டதால் விபத்து ஏற்பட்டது. ஆகையால், விபத்து முழுமையாக இறந்தவரின் சொந்த அலட்சியத்தினாலேயே ஏற்பட்டதாகும், TN-39-DY-3785 என்ற கார் ஓட்டுநரின் தவறினால் அல்ல. மேற்கண்ட விபத்தில், மனுதாரர்கள் பொய்யான வழக்கை உருவாக்கியுள்ளனர், எனவே, மனுதாரர்களின் மனு நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஆகும். இதனால், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பீட்டும் வழங்க வேண்டியதில்லை.

(iii) மனுதாரர்கள், விபத்துடன் தொடர்புடைய குற்றவியல் நீதிமன்ற

நடவடிக்கைகள் இருப்பதை உறுதியாக நிரூபிக்க வேண்டும். 2 மற்றும் 3 மனுதாரர்கள் திருமணம் செய்து கொண்டு தனித்தனியாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இறந்தவரை சார்ந்து வாழவில்லை. ஆகையால், இவ்வழக்கில் இழப்பீடு கோர அவர்களுக்கு உரிமை இல்லை. இதனால், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க பொறுப்பானவர் இல்லை. இறந்தவர் வேலை இல்லாத நபர் ஆவார். அவர் மாதம் ரூ.25,000/- வருமானம் ஈட்டியதாக கூறப்பட்டுள்ளது முற்றிலும் பொய்யானதாகும்.

(iv) மனுதாரர்களின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் தொகைகள் மிகையாக இருப்பதால் அவை மறுக்கப்படுகின்றன. TN-39-DY-3785 கார் ஓட்டுநர், விபத்து நேரத்தில் வாகனத்தை ஓட்டுவதற்கு தேவையான உரிய ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவில்லை. மேலும், 1ம் எதிர்மனுதாரர் (TN-39-DY-3785 கார் உரிமையாளர்-ஓட்டுநர்) காப்பீட்டு கொள்கையின் விதிமுறைகளையும், சம்பந்தப்பட்ட அனுமதி நிபந்தனைகளையும் மீறியுள்ளார். எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்கப் கடமைப்பட்டவர் அல்லர். இறந்தவரின் மரணத்திற்காக மனுதாரர்கள் கோரிய ரூ.24,25,000/- இழப்பீடு அளவுக்கு அதிகமானதாகும். எனவே மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில்,

1. இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்பது சரியா?

2. மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?

3.அப்படியானால் எவ்வளவு கிடைக்கத்தக்கது?

5) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவரது தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையிலான சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர் தரப்பில் திருவாடானை காவல் நிலைய குற்ற எண்.240/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், விபத்தில் இறந்து போன சிதம்பரம் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.2 ஆகவும், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.3 ஆகவும், 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆகவும், 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு சான்றிதழ் ம.சா.ஆ.5 ஆகவும், சிதம்பரம் என்பவரின் இறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.6 ஆகவும், வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.7 ஆகவும், 1, 2 மற்றும் 3 மனுதாரர்களின் ஆதார் அட்டைகள் ம.சா.ஆ.8 முதல் 10 ஆகவும், 1, 2 மற்றும் 3 மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.11 முதல் 13 ஆகவும், சிதரம்பரின் குடும்ப அட்டை ம.சா.ஆ.14 ஆகவும், சிதம்பரம் பேரில் உள்ள சொத்துக்களுக்கான கணினி பட்டா ம.சா.ஆ.15 ஆகவும், இவ்விபத்து தொடர்பாக திருவாடானை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.16 ஆகவும், விபத்து வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.17 ஆகவும், மாதிரி வரைபடம் ம.சா.ஆ.18 ஆகவும், பார்வை மகஜர் ம.சா.ஆ.19 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கண்ணன் என்பவர் ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது தரப்பில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் வெங்கடேஷ் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவரது தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>பிரச்சனை எண்: 1</u>

<u>கவனக் குறைவு:</u>

இருதரப்பு வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த 29.10.2022– தேதி மாலை 5.00 மணியளவில் இறந்துபோன சிதம்பரம் சின்ன கீரமங்கலம் பகுதியில் உள்ள ரவுண்டானா அருகில் தேவகோட்டை செல்லும் சாலையில் உள்ள APJ ஜவுளிக்கடை முன்பு பொருட்கள் வாங்கி கொண்டிருந்தபோது 1–ம் எதிர்மனுதார் 2–ம் எதிர்மனுதாருக்கு சொந்தமான TN–39–DY–3785 எண் கொண்ட வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிராதையாகவும் கவனக் குறைவாகவும் ஓட்டிவந்து சிதம்பரம் மீது மோதி விபத்து ஏற்பட்டதில், சிதம்பரத்திற்கு நெஞ்சுப்பகுதி மற்றும் கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சைக்காக திருவாடானை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அன்றைய தினமே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், இதுதொடர்பாக 1ம் எதிர்மனுதாரர் மீது திருவாடானை காவல் நிலையத்தில் குற்ற எண் 240/2022 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் இறந்து போன சிதம்பரம் சொந்தமாக நிலங்கள் வைத்து விவசாயம் செய்து வந்தார் என்றும், எனவே அவரது இறப்பிற்கு எதிர்மனுதாரர்கள் ரூ.24,25,000/- நஷ்ட ஈடாக வழங்குமாறு உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. எனவே, 1ம் எதிர்மனுதாரர் இவ்விபத்தினை ஏற்படுத்தினார் என்றும் சிதம்பரம் என்பவர் இறப்பிற்கு காரணமாக இருந்தார் என்றும் அவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையாலேயே விபத்து ஏற்பட்டதாகவும், எனவே, மனுதாரர் இழப்பீடு பெறத் தக்கவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

7) மனுவில் இறந்தவரின் வயது மற்றும் வருமானம், விபத்தின் தன்மை மற்றும் நிகழ்ந்த முறை, மேலும் கோரப்பட்ட இழப்பீட்டு விவரங்கள் ஆகியவை எல்லாம் கற்பனையானவை என்றும், ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் விபத்து ஏற்பட்ட சமயத்தில், இறந்தவர் சிதம்பரம் போக்குவரத்து விதிகளை பின்பற்றாமல் திடீரென சாலையை கடக்க முற்பட்டதால் விபத்து ஏற்பட்டதாகவும், ஆகையால், விபத்து முழுமையாக இறந்தவரின் சொந்த அலட்சியத்தினாலேயே ஏற்பட்டது என்றும், TN-39-DY-3785 என்ற கார் ஓட்டுநரின் தவறினால் அல்ல என்றும் எனவே 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பீட்டும் வழங்க வேண்டியதில்லை என்றும் 2 மற்றும் 3 மனுதாரர்கள் திருமணம் செய்து கொண்டு தனித்தனியாக வாழ்ந்து வருவதாகவும், அவர்கள் இறந்தவரை சார்ந்து வாழவில்லை என்றும் TN-39-DY-3785 கார் ஓட்டுநர், விபத்து நேரத்தில் வாகனத்தை ஓட்டுவதற்கு தேவையான உரிய ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவில்லை என்றும் எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், 3ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்கப் கடமைப்பட்டவர் அல்ல என்றும் இறந்தவரின் மரணத்திற்காக மனுதாரர்கள் கோரிய ரூ.24,25,000/- இழப்பீடு அளவுக்கு அதிகமானதாகும் என்றும், எனவே மனுதாரர்களின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8) இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 19 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இதில் ம.சா.ஆ.1 என்பது 1ம் எதிர்மனுதாரர் மீது திருவாடானை காவல் நிலையத்தில் குற்ற எண் 240/2022 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆகும். இதிலிருந்து இந்த விபத்தானது, 1ம் எதிர்மனுதாரரின்

கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாகத்தான் நடந்துள்ளது என்று முதல் தோற்றத்தில் தெரிய வருகிறது. ம.சா.ஆ.2 என்பது விபத்தில் இறந்துபோன சிதம்பரம் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை ஆகும். ம.சா.ஆ.16 என்பது இந்த விபத்து வழக்கு தொடர்பாக 1ம் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ஆகும். இதிலிருந்து, 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாகத்தான் இந்த விபத்து நடந்துள்ளது என்பதும் ஊர்ஜிதமாகிறது.

9) மனுதாரர் தரப்பு ஆவணங்களான ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையின் வாயிலாக, இந்த விபத்தானது, 1ம் எதிர்மனுதாரரின் கவனக் குறைவால்தான் நடந்துள்ளது என்றும் 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

10) அதற்கு மாறாக, 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், இறந்து போன நபரின் கவனக்குறைவாலேயே விபத்து ஏற்பட்டதாகவும் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படுத்தப்படவில்லை என்றும், குறிப்பாக சொல்லப்பட்டு அவர்களது தரப்பில் 3ம் எதிர்மனுதாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். எனினும், 3ம் எதிர்மனுதாரர் விபத்து நடந்தது குறித்து அதில் இறந்து போன நபர் இறந்துபோனது குறித்து, குறிப்பிட்டு மறுத்து சொல்லவில்லை. மாறாக, இறந்தவரின் வயது Investigation Report ன் அடிப்படையிலும், பிரேத பரிசோதனை அடிப்படையிலும் 65 ஆகும் என குறிப்பிட்டுள்ளார்.

11) இவ்வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எ.ம.சா.ஆ.1 என்பது காப்பீட்டு

நிறுவனத்தின் புலனாய்வு அதிகாரி கொடுத்த அறிக்கை ஆகும்.

12) எனவே ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சியத்தின் அடிப்படையிலும், ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.16 ன் அடிப்படையிலும், 1ம் எதிர்மனுதாரரே விபத்திற்கு காரணமாக இருந்தார் என்பது தெரிய வருகின்ற நிலையில், மேற்கண்ட விபத்தானது 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் மோதியதால் ஏற்பட்டது என்பதும் தெரிய வருகின்ற நிலையில், அது 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் வாகனத்தை ஓட்டியதாலே ஏற்படுத்தப்பட்டு சிதம்பரம் என்பவர் இறப்பிற்கு காரணமாக இருந்ததாக தெரிய வருகின்றது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. எனவே இவ்விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக பிரச்சனை 1ற்கு தீர்வு காண்கிறது.

13) **<u>பிரச்சனை 2:</u>**

**<u>இழப்பீட்டு நிர்ணயம்:</u>**

இம்மனுவினை பொருத்தமட்டில், 1ம் மனுதாரர் இறந்து போன நபரின் கணவராவார். 2ம் எதிர்மனுதாரர் அவரது மகள் ஆவார். 3ம் மனுதாரர் அவரது மகன் ஆவார். மனுதாரர்கள் தரப்பில் அவர்களது குடும்ப அட்டை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள் இறந்து போன நபரின் வாரிசு என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட உறவு முறை குறித்து 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டு மறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரர்களே இறந்து போன நபரின் சட்ட பிரதிநிதிகள் ஆவர். எனினும், 2, 3 மனுதாரர்கள் இறந்து போன நபரை சார்ந்திருக்கவில்லை என்ற வாதம் எடுக்கப்பட்டாலும் அது நிரூபிக்கப்படவில்லை.

**<u>14) வயது மற்றும் பெருக்கல் குறியீடு :</u>**

மனுதாரர்கள் தரப்பில், விபத்தின் இறந்துபோன சிதம்பரத்திற்கு வயது 65 என மனுவில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. இதனை நிரூபிக்க

வேண்டி மனுதாரர் தரப்பில் வயது குறித்த ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த ம.சா.ஆ.6 இறப்புச் சான்றிதழ் மற்றும் ம.சா.ஆ.7 வாரிசு சான்றிதழில் வயது 65 என காண்பிக்கப்பட்டாலும், எ.ம.சா.ஆ.1ல் ஆதார் அட்டையில் பிறந்த வருடம் 1940 என காண்பிக்கப்பட்டுள்ளது. எனவே அவை வேறுபாடாக உள்ளது. எனவே, பிரேத பரிசோதனை அறிக்கைப்படி வயது நிர்ணயிக்கப்படுகிறது. ம.சா.ஆ.2 பிரேத பரிசோதனை அறிக்கையை பரிசீலிக்கையில், சிதம்பரத்தின் வயது 70 என குறிப்பிட்டு காண்பித்து அது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இறப்பு சமயத்தின்போது 70 என நிர்ணயிக்கப்படுகிறது. விபத்து சமயத்தின் போது இறந்து போன நபரின் வயது 70 என நிர்ணயிக்கப்பட்ட நிலையில், மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தால் Smt.Sarala verma and Ors. – vs – Delhi Transport Corporation and anr. 2019 2 TN A MAC 1 (SC) என்ற வழக்கின் தீர்ப்புரையின் அடிப்படையில் அவருக்கு பெருக்கல் காரணியாக 5 என நிர்ணயிக்கப்படுகிறது.

15) **<u>இறந்து போனவரின் வருமானம் :</u>**

மனுதாரர் தரப்பில், இந்த விபத்தானது 29.10.2022ம் தேதியில் மாலை 5.00 மணியளவில் இறந்துபோன சிதம்பரம் என்பவர் APJ ஜவுளிக்கடை முன்பு பொருட்கள் வாங்கி கொண்டிருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–39.DY–3785 எண் கொண்ட Mahindra Bolero வாகனம் மோதியதால் ஏற்பட்டுள்ளது. விபத்தில் இறந்துபோன சிதம்பரத்திற்கு வயது 70 ஆகும். அவர் சொந்தமாக நிலங்கள் வைத்து விவசாயம் செய்து ரூ.25,000/– வருமானம் ஈட்டி வந்ததாக கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யப்படவில்லை. அவர் பெயரில் நிலங்கள் இருந்ததாக ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் விபத்தின் போது அவர் வயது 70 என்பதை கவனத்தில் கொள்ள வேண்டி உள்ளது. எனவே, அதன் அடிப்படையில், அவருடைய மாத வருமானம் ரூ.9,000/– என்று நிர்ணயிக்கப்படுகிறது. Smt.Sarala verma and Ors. – vs – Delhi Transport Corporation and anr. வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் கூறியுள்ளபடி இறந்து போன சிதம்பரத்திற்கு உரிய பெருக்கல் காரணி 5 ஆகும். இந்த விபத்து 29.10.2022 ல் நடந்துள்ளது. National Insurance Company Limited Vs. Pranay Sethi and Ors. வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கூறியுள்ளபடி இறந்து போன சிதம்பரத்திற்கு வயது 70 என்ற நிலையில் எதிர்கால வருமானம் இல்லை. மேற்படி Smt.Sarala verma and Ors. – vs – Delhi Transport Corporation and anr. வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கூறியுள்ளபடி இறந்து போனவரின் சொந்த செலவினங்களுக்காக மேற்படி தொகையில் 1 / 3 கழிக்கப்படுகிறது. அப்படியானால் 9,000 x 1 / 3 = 3,000/–ஆகும். 9,000 – 3,000 = 6,000/–ஆகும். மேற்படி ரூ.6,000/– தான் இழப்பீட்டை கணக்கிடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய மாத வருமானம் ஆகும். எனவே வருமான இழப்பு = 6,000 x 12 x 5 = 3,60,000/– ஆகும்.

16) இம்மனுவினை பொருத்தமட்டில் மனுதாரர் மற்றும் 2 மற்றும் 3 இறந்து போனவரின் வாரிசுகள் என்ற நிலையில், மனுதாரர் கணவரை இழந்ததற்காகவும், குழந்தைகள் தகப்பனாரை இழந்ததற்காகவும், ரூ.40,000/– loss of consortium என்ற தலைப்பின் கீழ் பெறத்தக்கவர் என்றும், அதன் அடிப்படையில் 40,000 x 3 = 1,20,000/– கிடைக்கத்தக்கது. சிதம்பரத்திற்கு இறுதி செலவிற்காக ரூ.15,000/–ம் மேலும், சொத்து இழப்பிற்காக loss of estate ரூ.15,000/– கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம்

தீர்மானிக்கிறது.

17) **பிரச்சனை 3**

**பொறுப்பு :**

1ம் பிரச்சனையின் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவாலேயே விபத்து ஏற்பட்டதாக முடிவு காணப்பட்டுள்ள நிலையில், 3ம் எதிர்மனுதாரரால் மனுதாரரின் வழக்கு மறுக்கப்பட்டிருந்தாலும், அவரது தரப்பில் விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை என்ற வாதம் எடுக்கப்படாத நிலையில், ஓட்டுநர் உரிமம் இல்லை என சொல்லப்பட்டு, அது நிரூபிக்கப்படாத நிலையில், ம.சா.ஆ.3ன்படி ஓட்டுநர் உரிமம் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது தெரிய வருகிறது. மேலும் எ.ம.சா.1ன் படி 1ம் எதிர்மனுதாரருக்கு 14.03.2022ல் இருந்து ஓட்டுநர் உரிமம் உள்ளதாக ஆவணம் உள்ளது. 2, 3ம் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு தொகையை சேர்ந்தோ, தனித்தோ கொடுக்க கடமைப்பட்டவர் என இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

18) எனவே மனுதாரர்களுக்கு சேர வேண்டிய இழப்பீட்டுத் தொகையை அடியிற்கண்ட கணக்கீட்டின் அடிப்படையில் கணக்கிட வேண்டும்.

| வரிசை எண் | விபரம் | இழப்பீட்டுத் தொகை ரூபாய். |
|---|---|---|
| 1 | வருமான இழப்பு | ரூ.3,60,000/- |
| 2 | அன்பு மற்றும் பாச இழப்பிற்காக (40,000 x 3 = 1,20,000/-) | ரூ.1,20,000/- |
| 3 | சொத்து இழப்பிற்காக | ரூ.15,000/- |
| 4 | இறுதிச் சடங்கு செலவிற்காக | ரூ.15,000/- |
| | மொத்தம் | ரூ.5,10,000/- |

மேலே கண்ட விவாதங்களிலிருந்து இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்றும், மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.5,10,000/− கிடைக்கத்தக்கது என்றும் இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

இறுதியில் மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1) மனுதாரர்களுக்கு 2, 3 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும், தனித்தும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என முடிவு செய்து, 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீட்டுத் தொகையாக ரூ.5,10,000/− மனு கோப்பிற்கு எடுத்த நாளிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5 % வட்டியுடன் (தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அக்காலம் நீங்கலாக) சேர்த்து ஒருமாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு VAN (Virtual Account Number) SCDVKSBIGENTHY1272022 மூலம் வைப்பீடு செய்து தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி தொகையில் 1ம் மனுதாரருக்கு ரூ.3,10,000/− கிடைக்கத்தக்கது என்றும், 2ம் மனுதாரருக்கு ரூ.1,00,000/−ம் கிடைக்கத்தக்கது என்றும் 3ம் மனுதாரருக்கு ரூ.1,00,000/− கிடைக்கத்தக்கது என்றும் உத்தரவிடப்படுகிறது.

3) வழக்குரைஞர் கட்டணம் ரூ.13,600/− என்று நிர்ணயம் செய்து உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர்கள் ஏற்கனவே செலுத்திய ரூ.372.50/−போக மீதி நீதிமன்றக் கட்டணம் ரூ.4,100/−ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் அந்த நாட்களுக்குரிய வட்டியை இழக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

5) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு வழக்கு எண்

Tr.Cmp 264 to 281 of 2020 M/s.Cholamandalam M/s. General Insurance Company Ltd., Vs.Mr.Ayyanar and Others ல் 11.05.2020 அன்று பிறப்பித்த உத்தரவுப் படி உத்தரவாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டு விட்டது. எனவே தனியாக உத்தரவாணை பிறப்பிக்கப்படாது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஏப்ரல் திங்கள் 16ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

KALAINILA Digitally signed by KALAINILA

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை
தீர்ப்பாய / சார்பு நீதிபதி, தேவகோட்டை.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:</u>**

ம.சா.1 – வைரவன் (1ம் மனுதாரர்)
ம.சா.2 – கண்ணன்

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 29.10.2022 | முதல் தகவல் அறிக்கை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 30.102022 | பிரேத பரிசோதனை அறிக்கை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | -- | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | -- | 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பதிவு சான்றிதழ் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | -- | 2ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் | | சான்றிட்ட நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| ம.சா.ஆ.6 | | சிதம்பரம் என்பவரின் இறப்பு சான்றிதழ் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | -- | வாரிசு சான்றிதழ் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | -- | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | -- | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.10 | -- | 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.11 | --- | 1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.12 | -- | 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.13 | -- | 3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.14 | -- | சிதம்பரம் என்பவரின் குடும்ப அட்டை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.15 | | சிதம்பரம் என்பவரின் பேரில் உள்ள சொத்துக்களுக்கான கணினி பட்டா | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.16 | 22.12.2022 | திருவாடானை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதிஅறிக்கை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.17 | 18.11.2022 | விபத்து வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.18 | 29.10.2022 | மாதிரி வரைபடம் | | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.19 | -- | பார்வை மகஜர் | | சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:</u>**

எ.ம.சா.1 – வெங்கடேஷ்

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் புலனாய்வு அதிகாரி கொடுத்த அறிக்கை | | அசல் |

KALAINILA Digitally signed by KALAINILA

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை
தீர்ப்பாய / சார்பு நீதிபதி, தேவகோட்டை.